## வகுப்பு - 8 - விலங்கியல், 20 - வளரிளம் பருவமடைதல்

**பயிற்சி வினாக்கள்:**

1. கீழ்க்கண்ட எந்த வயது வளரிளம் பருவத்தைக் குறிக்கிறது?

(1) 05 (2) 35-13 (3) 13-19 (4) 20-25

2. "அடோலசர்" என்பதன் பொருள் என்ன?

I. வளர்வதற்கு II. முதிர்ச்சிக்கான வளர்ச்சி

III. வளரிளம் பருவம் IV. வாலிப பருவம்

(1) I மற்றும் II சரியானது, III மற்றும் IV தவறானது

(2) I, II மற்றும் III சரியானது, IV தவறானது

(3) I, II மற்றும் IV சரியானது, III தவறானது

(4) அனைத்தும் சரியானது

3. கீழ்க்கண்டவற்றுள் ஆண்களின் இனப்பெருக்க சுரப்பி சுரக்கும் ஹார்மோன் எது?

(1) தைராக்சின் (2) அட்ரீனல் (3) இன்சுலின் (4) டெஸ்டோஸ்டிரோன்

4. கீழ்க்கண்டவற்றுள் பெண்களின் அண்டகங்கள் சுரக்கும் ஹார்மோன் எது?

(1) வளர்ச்சி ஹார்மோன் (2) குளுக்கஹான்

(3) தைராக்சின் (4) ஈஸ்ட்ரோஜன்

5. பாலியல் ஹார்மோன்கள் கீழ்க்கண்ட எந்த பணியில் ஈடுபடுகின்றன?

(1) வளர்ச்சியில் பங்கு பெறுகின்றன

(2) முதல் நிலை பாலினப் பண்புகளில் மாற்றம் உண்டாக்கும்

(3) இரண்டாம் நிலை பாலினப் பண்புகளில் மாற்றம் உண்டாக்கும்

(4) 2 மற்றும் 3 சரியானது

6. கீழ்க்கண்டவற்றுள் "ஆடம்ஸ் ஆப்பிள்" என்பது எதைக் குறிக்கிறது?

(1) இடுப்பு எலும்பு (2) இனப்பெருக்க சுரப்பி

(3) குரல்வளை (4) ஹார்மோன்கள்

7. ஆண்களின் இரண்டாம் நிலை பால் பண்புகளில் தவறானது எது?

I. தோல் கடினத்தன்மை அடையும்

II. குரல்வளையின் வளர்ச்சி அதிகரிக்கும்

III. தசைகளின் பலம் அதிகரிக்கும்

IV. குரல் உரத்த மற்றும் கீச்சிடும் ஒலியாக மாறும்

LIVEWORKSHEETS

(1) I மற்றும் IV (2) II மற்றும் IV (3) II மட்டும் (4) IV மட்டும்

8. பெண்களில் கிரா∴பியன் பாலிக்கிளை தூண்டி, ஈஸ்ட்ரோஜன் ஹார்மோனைச் சுரக்கச் செய்யும் ஹார்மோன் எது?

(1) LH ஹார்மோன் (2) லாக்டோஜெனிக் ஹார்மோன்

(3) FSH (4) ஆக்சிடோசின் ஹார்மோன்

9. பெண்களில் அண்டம் விடுபட கீழ்க்கண்ட எந்த ஹார்மோன் தேவை?

(1) புரோலாக்டின் ஹார்மோன் (2) லூட்டினைசிங் ஹார்மோன்

(3) ஆக்சிடோசின் ஹார்மோன் (4) டெஸ்டோஸ்டிரோன் ஹார்மோன்

10. பெண்களில் பால் உற்பத்திக்கும், பால் வெளியேற்றத்திற்கும் உதவி செய்யும் ஹார்மோன் எவை?

(1) புரோலாக்டின் ஹார்மோன் மற்றும் லூட்டினைசிங் ஹார்மோன்

(2) ஆக்சிடோசின் ஹார்மோன் மற்றும் தைராக்சின் ஹார்மோன்

(3) புரோலாக்டின் ஹார்மோன் மற்றும் ஆக்சிடோசின் ஹார்மோன்

(4) ஈஸ்ட்ரோஜன் ஹார்மோன் மற்றும் தைராக்சின் ஹார்மோன்

11. பெண்களில் முதிர்ச்சி அடைந்த அண்டம் எத்தனை நாள்களில் அண்டகத்தை விட்டு வெளியேறும்?

(1) 12 நாள்கள் (2) 13 நாள்கள் (3) 14 நாள்கள் (4) 15 நாள்கள்

12. அண்டகத்தை விட்டு அண்டம் வெளியேறியவுடன் பாலிக்கிள் செல்கள் கீழ்க்கண்ட எந்த சுரப்பியாக மாறுகிறது?

(1) தைராய்டு சுரப்பி (2) பிட்யூட்டரி சுரப்பி (3) அட்ரீனல் (4) கார்பஸ்லூட்டியம்

13. புரோஜெஸ்டிரான் ஹார்மோன் பற்றிய கருத்தில் எது சரியானது?

I. கருவுற்ற முட்டையைப் பெற கருப்பையை தயார் செய்கிறது

II. கருப்பை சுவரை தயார் செய்கிறது

III. முட்டை அண்டகத்தை விட்டு வெளியேற உதவுகிறது

IV. டெஸ்டோஸ்டிரோன் என்ற ஹார்மோனை உற்பத்தி செய்ய உதவுகிறது

(1) I மற்றும் II (2) II மற்றும் III (3) III மற்றும் IV (4) I மற்றும் III

14. அண்டம் கருவுறநாத நிலையில் புரோஜெஸ்டிரான் மற்றும் ஈஸ்ட்ரோஜன் உற்பத்தி ______.

(1) அதிகரிக்கிறது (2) குறைகிறது

(3) தடைபடுகிறது (4) முதலில் குறைந்து பின்பு அதிகரிக்கிறது

LIVEWORKSHEETS

15. மாதவிடாய் காலத்தில் ஏற்படும் அதிக இரத்தப்போக்கை ஈடு செய்ய கீழ்க்கண்ட எந்தச் சத்து மிகுந்த உணவை அதிகம் எடுத்துக்கொள்ள வேண்டும்?

(1) அயோடின் (2) கால்சியம் (3) இரும்பு (4) மெக்னீசியம்

16. ஆஸ்டியோபோரோசிஸ் என்ற எலும்பு உடையும் தன்மையைத் தடுக்க கீழ்க்கண்ட எந்தச் சத்து மிகுந்த உணவை எடுத்துக்கொள்ள வேண்டும்?

(1) இரும்பு (2) கால்சியம் (3) மெக்னீசியம் (4) வைட்டமின்கள்

17. தைராய்டு தொடர்பான நோய்கள் வராமல் தடுப்பது ______.

(1) இரும்பு (2) வைட்டமின் K (3) வைட்டமின் D (4) அயோடின்

18. இரத்த சோகை நோய் ஏற்படாமல் தடுக்க உதவும் சத்து எது?

(1) அயோடின் (2) மெக்னீசியம் (3) இரும்பு (4) கால்சியம்

19. அடோலஸன்ஸ் (வளரிளம் பருவம்) என்ற சொல் கீழ்க்கண்ட எந்த மொழியில் இருந்து பெறப்பட்டது?

(1) ஆங்கிலம் (2) இலத்தீன் (3) பிரெஞ்சு (4) தமிழ்

20. நாளமில்லாச் சுரப்பிகளால் சுரக்கப்படும் வேதிப்பொருள் எது?

(1) வைட்டமின்கள் (2) அமினோ அமிலம் (3) ஹார்மோன்கள் (4) நியூக்ளிக் அமிலம்

21. ஆன்ட்ரோஜன் அல்லது டெஸ்டோஸ்டிரோன் ஹார்மோன் உற்பத்தி கீழ்க்கண்ட எந்த ஹார்மோனால் ஒழுங்குப்படுத்தப்படுகிறது?

(1) GH ஹார்மோன் (2) LH ஹார்மோன் (3) TSH ஹார்மோன் (4) ACTH ஹார்மோன்

22. கீழ்க்கண்டவற்றுள் சரியான பொருத்தம் எது?

I. விந்தகம் - 1) ஈஸ்ட்ரோஜன் ஹார்மோன்

II. அண்டகம் - 2) டெஸ்டோஸ்டிரோன் ஹார்மோன்

III. முட்டை விடுபடுதல் - 3) புரோலாக்டின் ஹார்மோன்

IV. பால் உற்பத்தி - 4) லூட்டினைசிங் ஹார்மோன்

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (1) | 2 | 1 | 4 | 3 |
| (2) | 1 | 2 | 4 | 3 |
| (3) | 3 | 4 | 1 | 2 |
| (4) | 4 | 1 | 2 | 3 |

23. கூற்றுகளை ஆராய்க.

LIVEWORKSHEETS

கூற்று: மாதவிடாய் நேரத்தில் பெண்கள் இரும்பு சத்து நிறைந்த உணவுகளை அதிகம் எடுத்துக் கொள்ள வேண்டும்

காரணம்: மாதவிடாய் நேரத்தில் ஏற்படும் இரத்த இழப்பை ஈடு செய்ய இரும்பு சத்து தேவை

(1) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி கூற்றுக்கு காரணம் சரியான விளக்கம்

(2) கூற்று சரி காரணம் தவறு

(3) கூற்று தவறு காரணம் சரி

(4) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி கூற்றுக்கு காரணம் சரியான விளக்கம் அல்ல

24. கீழ்க்கண்ட ஹார்மோன்களில் எது தனித்த ஹார்மோன் அல்ல?

(1) புரோலாக்டின் ஹார்மோன் (2) லூட்டினைசிங் ஹார்மோன்

(3) ஈஸ்ட்ரோஜன் ஹார்மோன் (4) ஆக்சிடோசின் ஹார்மோன்

25. லூட்டினைசிங் ஹார்மோன் பற்றிய கருத்தில் தவறானது எது?

(1) பெண்களில் அண்டம் விடுபட உதவுகிறது

(2) கார்பஸ்லூட்டியம் உருவாக்கத்திற்கு உதவுகிறது

(3) ஆண்களின் விந்தகங்களில் காணப்படும் இடையீட்டுச் செல்களைத் தூண்டி டெஸ்டோஸ்டீரானை உற்பத்தி செய்கிறது

(4) தைராய்டு தொடர்பான நோய்களைக் கட்டுப்படுத்த உதவுகிறது

26. பொருத்துக.

(i) பருவமடைதல் - a. தசை உருவாக்கம்

(ii) ICSH - b. பாலின முதிர்ச்சி

(iii) ஆண்ட்ரோஜன் - c. டெஸ்டோஸ்டீரான்

(iv) ஆடம்ஸ் ஆப்பிள் - d. குரலில் மாற்றம்

(v) மாதவிடைவு - e. 45 முதல் 50 வயது

(1) i - b ii - c iii - a iv - d v - e (2) i - e ii - b iii - a iv - d v - c

(3) i - b ii - c iii - e iv - d v - a (4) i - c ii - e iii - d iv - a v - b

27 பருவமடைதலின் போது ஏற்படும் முதல் மாதவிடாய் சுழற்சி _______ எனப்படும்.

(1) அண்டம் (2) கர்ப்ப காலம் (3) பூப்படைதல் (4) மாதவிடாய்

28 கருவுறுதல் _______ நாளத்தில் நடைபெறும்.

(1) எண்டோமெட்ரியல் (2) கார்ப்பஸ் லூட்டியம்

(3) லீடிக் செல்கள் (4) பெல்லோபியன்

29 _______ன் தொடர் வளர்ச்சியால் புரோஜெஸ்ட்ரான் உற்பத்தி செய்யப்படுகிறது.

(1) கார்ப்பஸ் லூட்டியம் (2) லீடிக் இடையிட்டு செல்கள்

LIVEWORKSHEETS

(3) கிராபியன் பாலிக்கிள் (4) அடினோ ஹைபோபைசிஸ்

30. அயோடின் பற்றாக்குறையால் ஏற்படுவது ______.

(1) இரத்த சோகை (2) தைராய்டு தொடர்பான நோய்கள்

(3) மாலைக்கண் (4) நிறக்குருடு

31. பெண்கள் பருவமடைவதற்கான சராசரி வயது ______.

(1) 10 - 12 (2) 10 - 13 (3) 10 - 11 (4) 10 - 15

32. ஆண்கள் பருவமடைவதற்கான சராசரி வயது ______.

(1) 12 - 14 (2) 12 - 15 (3) 12 - 16 (4) 12 - 13

33. விந்தகம் சுரக்கும் ஹார்மோன் ______.

(1) விந்து செல் (2) டெஸ்டோஸ்டீரான் (3) இரத்த நாளம் (4) ஈஸ்ட்ரோஜன்

34. வளரிளம் பருவத்தில் ஆண்களின் உயரம் சராசரியாக எத்தனை சென்டிமீட்டர் அதிகரிப்பு ஏற்படும்?

(1) 22 செ.மீ (2) 25 செ.மீ (3) 23 செ.மீ (4) 20 செ.மீ

35. வளரிளம் பருவத்தில் பெண்களின் உயரம் சராசரியாக எத்தனை சென்டிமீட்டர் அதிகரிக்கும்?

(1) 22 செ.மீ (2) 23 செ.மீ (3) 25 செ.மீ (4) 26 செ.மீ

LIVEWORKSHEETS